இருபதாம் நூற்றாண்டு வரை இப்படித்தான் . அலான்சோ சர்ச்சு என்பாரும் , ஆலன் டூரிங் என்பாரும் கணினியியலை ஒரு துறையாக நிறுவிய பிறகே பொதுமையிலிருந்து-விதுமை விடுத்து பொதுமை நோக்கித் திரும்பியது அறிவியல் . கணினி என்ற ஒரே கருவியை ஒன்றுக்குமேற்பட்ட பல்வேறு பணிகளைச் செய்யுமாறு பணிக்கமுடியும் என்ற நிலையை எட்டியது கடந்த நூற்றாண்டில்தான். கணினியை தேவைக் கேற்ப பணிக்க அவற்றுக்கு என்ன செய்யவேண்டும் என்று அறிவுறுத்த வேண்டும். அப்படி அறிவுத்தும் முறைகளை இருபெரும் பிரிவுகளாக பிரிக்கலாம் . அ) நிரலாக்கம்(Programming) என்பது பணிகளின் செய்முறையை ஆய்ந்து என்னென்ன செய்யவேண்டும், எந்த வரிசையில் செய்யவேண்டும் என்று கட்டளைகளை எந்தவிதப் பொருள்மயக்கமும் (பொருள்மயக்கங்கள் தான் நிரல் வழுக்களுக்கு(programming bugs) முதற்காரணம்) இல்லாமல் தெளிவாக நிரலாய் தரித்துத் தருவது. ஆ) மாறாக ஒவ்வொரு பணியின் செய்முறைக்கும் நிரல் தரிக்காமல், மாந்தர் எப்படி கற்கின்றனரோ அப்படிக் கற்கச் செய்வது செய்யறிவாகும் (Artificial Intelligence). செய்யறிவில் கணினியோ /கருவியோ எப்படி கற்கிறது, என்ன கற்கிறது என்பதைப் பொறுத்துப் பல துறைகள் அதனுள் அடங்கும்.

அதில் ஒன்று தான் கற்குங்கருவியியல் (Machine Learning). இதையிதை இப்படித்தான் செய்யவேண்டும் என்று கட்டளைகளை எழுதாமல் , என்ன செய்யவேண்டும் என்பதை

எடுத்துக்காட்டுகளிலிருந்து பிழிந்தெடுக்கச் செய்வது கற்குங்கருவியியல் . இப்படிப் பிழிவதற்கான நுட்பங்களை புள்ளியியல், கணிதவியல் என்று பல்வேறு துறைகளிலிருந்து பெறலாம்.

1.3.1. **நரவலை**

மூளையில் ஏறக்குறைய நூறுகோடி நரம்பணுக்கள் உள்ளன , ஒவ்வொரு அணுவும் மற்ற ஆயிரக்கணக்கான அணுக்களோடு பின்னபட்டிருக்கும் . இப்படியான பிணைப்புகள் கிட்டத்தட்ட நூறாயிரங்கோடி. கணினியில் எப்படி எளிமையான செயலாக்கம் கொண்ட டிரான்சிசுட்டர்கள் பல்லாயிர எண்ணிக்கையில் சேர்ந்து இயங்கும்போது கணினி வியத்தகு செயல்களைச் செய்கிறதோ அப்படியே எளிமையான நரம்பணுக்கள் கூட்டாக இயங்கும் போது மூளை வியத்தகு வேலைகளைச் செய்கிறது[1,2,3]. இயற்கையாக அமைந்த மூளையின் செயலையும் அமைப்பையும் உந்துதலாகக்கொண்டு செய்யறிவறிஞர்கள் படைத்தது தான் செய்நரவலை (Artificial Neural Network) சுருக்கமாக செ.ந.வ (ANN) நரவலை என்பது செய்யறிவு இயக்க கொள்கையில் ஒன்றான கூட்டியியக்கியத்தின் (connectionism) மெய்ப்படுத்தும் (realization) முறைகளில் ஒன்று . நரம்பணுக்கள்(neurons) ஒன்றோடொன்று பிணைந்து வலை போன்ற அமைப்பை ஆக்கும் . நரம்பணுக்கள் தனித்தனியே சிறிய சிறிய செயல்களைச் செய்தாலும் அவை கூட்டாக ஒருங்கிணைந்து இயங்கும் போது சிக்கல் மிகுந்த செயல்களைச் செய்ய வல்லன.

செயலிலும் சரி , அமைப்பிலும் சரி , செய்நரவலையிலுள்ள நரம்பணுக்கள் முற்றிலுமாக மூளையின் நரம்பணுக்களை ஒத்தவை அல்ல . அமைப்பு, செயல், பயிலும் விதம் முதலிய பல கூறுகளைப் பொறுத்து செய்நரவலைகளிலும் பல்வேறு வகைகளுண்டு . ஒவ்வொன்றிலும் நரம்பணுவின் பண்புகள் வெவ்வேறு அளவுகளில் மூளையின் நரம்பணுவை ஒத்ததாக இருக்கும் . இங்கு நாம் காணப்போகும் நரம்பணுவோ மிகமிக எளிமையான ஒன்று.

நாம் காணப்போகும் நரவலைகள் இழையிழையாக அமைந்திருக்கும் . ஒரு இழையில் பல அணுக்கள் இருக்கும். ஒவ்வொரு இயிலுள்ள அணுக்கள் அடுத்துள்ள இழையிலிருக்கும் அனைத்து அணுக்களோடும் பிணைந்திருக்கும் . எல்லாப் பிணைப்புகளும் ஒரே வலிமையுடைன அல்ல . பிணைப்புகளின் வலிமைகளை மாற்றுவதால் , ஒரே அமைப்புடைய ஒரி வேறு நரவலைகள் வெவ்வேறு பணிகளைச் செய்ய வைக்கமுடியும்[4,5,6,7,8,9]. முதல் இழை உள்ளீட்டு இழை (input layer) என்றும், கடையிழை வெளியீட்டு இழை (output layer)என்றும், இடையில் இருக்கும் இழைகள் மறையிழைகள் (hidden layers) என்று அழைக்கப்படும் . எல்லா இழைகளும் ஒரெயளவிலான எண்ணிக்கையில் அணுக்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதில்லை . காட்டாக மூன்று இழைகள் இருக்கும் வலையைக் கீழ்வரும் படம் -3 இல் காணலாம் . முதல் இழையில் மூன்று அணுக்களும் , இரண்டாம் இழையில் நான்கு அணுக்களும் , கடை இழையில் இரண்டு அணுக்களும் இருப்பதை நோக்குக. உள்ளீட்டுத் தரவு உள்ளீட்டிழையில் தொடங்கி பல இழைகளைக் கடந்து வெளியீட்டிழையில்

வந்து சேரும் போது சரியான வெளியீடாக இருக்க வேண்டும் . அப்படி இல்லையெனில் சரியான வெளியீட்டிற்கும், வலை கணித்த வெளியீட்டிற்கும் உள்ள இடைவெளியைப் பிழையென (error) கருதுவோம். பிழையை பின்னோக்கிப் பாய்ச்சி இழைகளுக்கு இடையில் உள்ள இணைப்புகளை வலுப்படுத்தவோ, நலிவுறவோ செய்வோம். இப்படி பிழையைப்பாய்ச்சி வலையைத் திருத்துவதால் , (பின்)பிழைபாய்ச்சல் நரவலை (backpropagation neural networks) [10,11] என்று அழைக்கப்படும். இப்படி பிழைபாய்ச்சி வலையிலுள்ள பிணைப்புகளை மாற்றுவதை திருத்துதல் அல்லது பயிற்றுவித்தல்(training). இங்கிருந்து நரவலை என்று சொல்வதெல்லாம் பிழைபாய்ச்ச நரவலையையே குறிக்கும்.



படம்-3: மூவிழை நரவலை

நரவலை உள்ளீடாக எண்களின் பட்டியலையே கொள்ளும் . வெளியீடாகவும் எண்களின் பட்டியலே வரும். இப்படி எண்களின் பட்டியலை கணிதத்தில் காவி என்று சொல்வர். காவியைப் பற்றி விவரம் பின்னே வருகிறது. இங்கே கவனிக்க வேண்டியது மூன்று அணுக்கள் உள்ள இந்த வலை மூன்று எண்களுள்ள காவியை உட்கொள்ளும். மூன்று எண்கள் என்றால், முப்பரிமான வெளியில் (three dimensional space) உள்ள ஏதோ ஒரு புள்ளியைக் குறிக்கும் . அதே போல வெளிவரும் இருபரிமானக் காவிகள் இருபரிமான வெளியில் உள்ள புள்ளிகளைக் குறிக்கும் . இடையிலுள்ள இழைகளுக்கும் இதை பொறுத்திப் பார்த்தால் , நரவலை ஒரு வெளியில் உள்ள புள்ளிகளை வெவ்வேறு வெளிகளுக்குக் கடத்துகிறது. பிழையைப் பாய்ச்சுவதின் மூலம் இந்த கடத்தல் நடக்கும் பாதைகளை கட்டமைப்பதை உணரலாம்.

அமைப்பைப் பொறுத்து நரவலைகளை இரண்டாக பகுக்கலாம் . முன்னூட்ட நரவலை (feedforward neural network), பின்னூட்ட நரவலை (recurrent neural network) [12,13]. முன்னூட்ட வலையில் மடைகள் (loop) ஏதுமில்லாமையால் தகவல்/உள்ளீடு ஒரே திசையில் இழைகளின் ஊடாக ஒருமுறை தான் பயணிக்கும். பின்னூட்ட வலையிலோ மடையின் துணையால் உள்ளீடு இழைகளின் ஊடாக பலமுறை பயணிக்கக் கூடும். இயன்மொழி வினையாட்டங்களில் பின்னூட்ட நரவலைகளின் பங்கு

முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரே வலை, ஒரு தொடரில் உள்ள சொற்களை ஒவ்வொன்றாக உள்வாங்கி தொடரின் பொருளை அறியும் . பின்னூட்ட நரவலையின் மடைப்பண்பு முன்வந்த சொற்களை நினைவில் கொண்டு எதிர் வரும் சொற்களை நோக்க வழிசெய்கிறது.

2. ஒப்புகளும் முறைகளும்

இயன்மொழியாள்கை பிரிவில் சொன்னது போலப் பல வினையாட்டங்களை பற்றிப் பார்த்தோம். அடையாளங்களிட்ட தரவுக்கணங்களை உருவாக்குவது எளிதான காரியமல்ல . ஆகையால் முதல் படியாக அடையாளம் ஏதுமில்லாமல் செய்யக்கூடிய வினையாட்டம் ஒன்றைச் செய்கிறோம். மொழியொப்பாக்கம்.

2.1 மொழியொப்பு

ஒரு கேள்வி. காட்டில் புலி ____ அடித்துத் தின்றது. விடுபட்ட சொல் என்ன? நம் மனதில் முதலில் தோன்றும் சொல் மானை. சிலருக்கு ஆட்டை, குதிரையை என்ற சொற்களும் தோன்றலாம். மான் முதலிய விலங்குகளை புலி முதலிய விலங்குகள் அடித்துக் கொள்ளும் என்ற உலகைப்பற்றிய அறிவு இருப்பினும் மான் என்று தோன்றாமல் மானை என்று தோன்றக்காரணம் , தமிழில் இப்படித்தான் சொற்றொடர் அமையும் என்று நமக்குள்ள மொழியாளுமை.

மாந்த மூளை எப்படி மொழியைப் புரிந்துகொள்கிறது என்பதை இன்னும் ஐயத்திற்கு இடங்கொடாமல் அறுதியிட்டுச் சொல்வதற்கில்லை . இன்னும் ஆய்வில் உள்ளப் புலம் தான் அது . எனினும் இதிலிருந்து ஒன்றை உய்த்தறியலாம் . சுற்றி அமைந்தச் சொற்கள் (புலி, அடித்து, தின்றது) விடுபட்டச் சொல் (மானை) என்னவாக இருக்கலாம் என்று கண்டறிய உதவுகிறது . இதே சோதனை வேறுமாதிரி செய்வோமானால், புலி மானை அடித்து _____. இப்போது விடுபட்டச் சொல் என்ன என்று கேட்டால் கொன்றது, தின்றது என்ற சொற்கள் தோன்றலாம். இப்படி ஒரு சொற்றொடரில் இருக்கும் சொற்களை கொண்டு விடுபட்ட சொற்களைக் கணிக்கச்செய்வது மொழியொப்பாக்கம் எனப்படும் . புள்ளியியல், கற்குங்கருவியியல் நுட்பங்களைக் கொண்டு மொழியின் கூறுகளை கணியொப்பாக்குவதே கணிய-மொழி-யொப்பாக்கம் (computational language model).

2.1.1. எ-கிறுவம்

மேற்சொன்ன படி முன்வரும் சொற்களைக் கொண்டு தொடர்ந்து வரும் சொல்லைக் கணித்தலின் பெயர் , எ-கிறுவ மொழியொப்பாக்கம். முன்வரும் சொற்களில் அனைத்துச் சொற்களையும் கருத்தில் கொண்டு அடுத்த சொல்லைக் கணிக்கவேண்டும் என்றில்லை . (புலி, மானை, அடித்து) என மூன்று சொற்களைக் கொண்டு கணித்தால் 4-கிறுவம் எனக்கொள்க. (மானை அடித்து) என இரண்டு சொற்களை மட்டும் கருத்தில் கொண்டு கணித்தால் 3-கிறுவம் எனக்கொள்க.

இப்படி எத்தனைச் சொற்களைக் கணக்கில் கொள்கிறோமோ அதைப் பொறுத்து எ-கிறுவம் எனலாம்.



படம்-4: கிறுவங்களை எப்படி ஒரு சொற்றொடரில் இருந்து படைக்கலாம் என்பதின் ஒரு உத்தி. பல்வேறு நீளங்கொண்ட சாளரங்களி சொற்றொடரின் மீது ஓட்டி, சாளரத்தினுள் அடங்கும் சொற்கள் கிறுவங்களாகும்.

2.1.2. **தாவிய-கிறுவம் 4**

எ-கிறுவத்தில் முன்வரும் சொற்களை அதாவது ஒரு சொற்றொடரின் முன்பகுதியைக் கொண்டு மீதியைக் கணித்தோம். எடு.கா. புலி மானை அடித்து தின்றது என்ற சொற்றொடரில் உள்ள அனைத்து இருகிறுவங்களையும்(2-கிறுவங்கள்) தொகுத்தால் [புலி மானை, மானை அடித்து, அடித்து தின்றது] என்பன. [புலி அடித்து] என்பது அச்சொற்றோடருக்கான இருகிறுவமில்லை. ஏனெனில் தொடர்ச்சி அறுந்து போகிறது . தாவிய-கிறுவத்திலோ முன்வரும் சொற்கள் தொடர்சியாக் இருக்கவேண்டும் என்றில்லை. தாவிய-கிறுவம் *(skip-gram)* என்பது எ-கிறுவத்தின் (பொதுமைப் படுத்திய, generalization) நீட்சி. த-தாவிய-எ-கிறுவம் என்றால் எ -எண்ணிக்கையுள்ள கிறுவங்களில் அதன் உறுப்புகள் சொற்றொடரில் த-தூரத்தில் இருக்கும் எனக்கொள்க. எனவே [புலி அடித்து] என்பது சொற்றொடரின் *1*-தாவிய-*2*-கிறுவங்களில் ஒன்று.

கிறுவங்களை திரட்ட ஒரு சொற்றொடரின் மீது நகரும் சாளரத்தை ஒட்டி சாளரத்தினும் வரும் உருப்படிகளை (சொற்களை) கிறுவங்களாக கொள்ளலாம். சாளரத்தின் நீளம் இரண்டாய் இருப்பின் இருகிறவம் கிடைக்கும் , மூன்றாய் இருப்பின் மூகிறுவம் கிடைக்கும் . இப்படி த -தாவிய-எ-கிறுவங்களை, சேகரித்த பனுவல்களில் இருந்து திரட்டி , நரவலைக்கு எடுத்துக்காட்டுகளாக ஊட்டித் தான் கணியொப்பை வடிக்கிறோம்.

2.2. **கணியொப்புகள்**

பெரிய கட்டங்களைக் கட்ட தொடங்கும் முன்பு தாள்கள் அட்டைகள் கொண்டு கட்டட அமைப்பைப் சிறிய வடிவில் அச்சு /போலி பாவணைச் செய்வது கட்டடப் பொறியாளரின் வழக்கம் .

இப்படி அளவிலும் வடிவிலும் மட்டும் சிறியதான பாவணைச் செய்ய வேண்டும் என்றில்லை , செயலிலும் இருக்கலாம். இயற்கையின் பல நிகழ்வுகள் சிக்கல் மிகுந்தவை , எளிமையாக புரிந்து கொள்ளத்தக்கன அல்ல. இப்படி இயற்கையின் நிகழ்வுகளின் இயல்புகளைத் துல்லியமாக ஆய்ந்தறிய முடியாத இடங்களில் தோராயாமாகவாது அறிய உதவும் முறை ஒப்பாக்கம் (modelling). ஒப்பாக்கம் கணினியின் துணைகொண்டு வடிக்கப்பட்டால் அது கணியொப்பு(computational model).

வரிசை எண்	சொல்	நிகழ் வெண்		வரிசை எண்	சொல்	நிகழ் வெண்
1	இப்படியான	1		1	முழுக்க	2
2	ஏறக்குறை	1		2	இப்படியான	1
3	ஒப்புகளை	1		3	ஏறக்குறை	1
4	கற்குங்கருவியியல்	1		4	ஒப்புகளை	1
5	நுணுக்கங்களை	1		5	கற்குங்கருவியியல்	1
6	பற்றியதே.	1		6	நுணுக்கங்களை	1
7	முழுக்க	2		7	பற்றியதே.	1
8	வடிப்பதற்கான	1		8	வடிப்பதற்கான	1
	(அ)				(ஆ)	

அட்டவணை-1: சொல்லடைவு எடுத்துக்காட்டு.

கற்குங்கருவியியல் துறை ஏறக்குறைய முழுக்க முழுக்க இப்படியான ஒப்புகளை வடிப்பதற்கான நுட்பங்களைப் பற்றியதே. அதில் மொழியாய்வுக்கு முக்கியமான ஒன்று சொற்றூவல் (சொல்-தூவல், word-embedding). கணியொப்புகள் உட்கொள்ளும் வகையில் சொற்களை எண்களாக மாற்றுவது மிக அவசியம்.

அ) எளிமையான அதேவேளை சாரம் ஏதுமற்ற முறையில் சொற்களை எண்ணாக்கும் வழி , இருக்கும் சொற்களனைத்தையும் ஒரு பட்டியலாக (அகர)வரிசைப் படுத்தி சொல்வரும் வரிசையை அச்சொல்லின் எண் வடிவாகக் கொள்ளலாம் . இப்பத்தியின் முதல் வரியில் இருக்கும் சொற்களை மட்டும் தொகுத்தால் கிடைக்கும் சொல்லடைவை*(vocabulary)* அட்டவணை-1-இல் காணலாம்.. முழுக்க என்ற சொல் மட்டும் இரண்டு முறை வந்திருப்பது கவனிக்கத் தக்கது . சொற்களை அகரவரிசைப் படித்தான் வரிசைப்படுத்த வேண்டும் என்றல்ல, அவை எத்தனை முறை வருகின்றன /நிகழ்கின்றன என்பதைப் பொறுத்தும் இருக்கலாம்.

ஆ) இன்னொரு முறை காவிகளாக மாற்றுவது. காவி*(vector)* என்பது ஓர் எண்ணாக இல்லாமல் எண்களின் பட்டியலாக மாற்றுவது. இங்கே பட்டியலின் நீளத்தைக் காவியின் பரிமானம் எனக்கொள்க. காவி பல பரிமானங்களுடையது. எடு.கா: *[0 0]* இருபரிமான காவி, *[3 2 4]* என்பது முப்பரிமான காவி,

இப்படி நூறு அல்லது ஆயிரம் எனப் பல அளவுகளிலான காவிகளை பயன்படுத்துவது கற்குங்கருவியியலில் வாடிக்கையான ஒன்று . *[0 1], [1 0]* என்ற காவிகள் இரண்டும் இருபரிமானமுடையது என்றாலும், இரண்டிலும் 0-உம், 1-உம் தான் வருகிறது என்றாலும் , இரண்டும் வெவ்வேறு காவிகள் என்பதைக் கருத்தில் கொள்க . எண்களின் மதிப்பும் , அவை இருக்கும் இடங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதையுணர்க.

எளிமையான வரிசை எண்ணை விடுத்து எதற்கு இப்படிப் பலபரிமானக் காவியைப் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு . காவிகள் பல பரிமானங்களில் வந்தாலும் , சொற்களைக் காவிகளாக மாற்றும்போது எல்லாச்சொற்களும் ஒரே அளவிலான காவிகளைக் கொண்டுதான் குறிக்கப்படும் . வெவ்வேறு சொற்களைக்குறிக்க வெவ்வேறு காவிகள் இருக்கும் , அதாவது ஒவ்வொரு சொல்லும் ஒரே அளவிலான பரிமானங்கொண்ட காவிகளைக் கொண்டு குறிக்கப் பெற்றாலும், காவிக்குள் உள்ள எண்களின் மதிப்பு சொற்களை வேறுபடுத்திக்காட்டும். இப்படி காவிகளின் அளவு நிலையானதாக இருப்பதின் சாதகம் , மொழியின் அதிலும் குறிப்பாக தமிழ் போன்ற ஒட்டுநிலை மொழியின் சொல்லடைவை வரிசையெண் கொண்டு குறியிடும் போது வரும் சிக்கலுடன் ஒப்பிடும் போது வெட்ட வெளிச்சமாகும் . ஆனால் காவிகளை அகரவரிசை கொண்டோ , நிகழ்வெண் வரிசை கொண்டோ நாமாக ஒரு காவியை ஒரு சொல்லுக்கு கொடுக்க முடியாது . சொல்லுக்காண காவிகளைக் கண்டறிய வேண்டும் . காவிகளை நரவலையின் ஓர் உறுப்பாய் அமைத்துவிட்டால், திரட்டிய கிறுவங்களைப் பொறுத்து வலையை திருத்துவதின் மூலம் காவிகளைக் கண்டறியச் செய்யலாம். இப்படிச் செய்வதின் முலம் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு காவி , அதாவது காவியின் பரிமான வெளியில் ஒரு புள்ளி ஒதுக்கப்படுகிறது . அதாவது 200-பரிமான காவிகளை சொற்களுக்கு ஒதுக்குகிறோம் என்றால் , 200-பரிமான வெளியில், சொற்களை தூவி விடுகிறோம் எனக்கொள்ளலாம். ஆகையால் சொற்களைக் குறிக்கும் காவிகள் , சொற்றூவல் (சொல்தூவல்) காவிகள் என்றும் அழைக்கப்படும்.

3. **தரவுக்கணம்**

3.1. **தரவுச்சேகாரம்**

இருவேறு வழிகளில் சொல்லோடை -2021 தரவுகள் (பனுவல்கள்) சேகரிக்கப்பட்டன. அ) ஏற்கனவே தொக்குக்கப்பட்ட தரவுகணங்கள். AI4Bharat, Leipzig Tamil Corpus, tamiltext-7M.txt

ஆ) இணையத்தில் வெளிவரும் பல்வேறு செய்தித்தாள்களிலும், வலைப் பூக்களிலும், விக்கிப்பீடியா போன்ற களஞ்சியங்களுலும் இருந்து , தமிழ் பனுவல்களைச் சேகரித்தோம் . இணையதளத்தில் இருந்து பனுவல் படங்கள் முதலிய வளங்களை கவர எழுதப்படும் நிரல்வகை சிலந்தி எனப்படும் . இணையதளப் பக்கங்கள் ஒன்றோடொன்று தொடுக்கப்பட்டிருப்பதால் , ஒவ்வொரு பக்கத்தையும்

அணுகி அவற்றில் இருக்கும் வளத்தைக் கவர்வதால் சிலந்தி என்ற பெயர் சாலப் பொருந்தும் . ஒவ்வொரு தளமும் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டுள்ளன . தளத்திற்கேற்பச் சிலந்திகளை எழுத Scrapy என்ற பைத்தான்ச் (python) சட்டகத்தைக் (framework) கையாள்கிறோம். இப்படி கவர்ந்த பக்கங்களை mongodb எனும் தரவுதளத்தில் சேமிக்கிறோம். கவரப்பட்டப் பக்கங்களில் இருந்து கட்டுரை, அதன் தலைப்பு , வெளிவந்த நாள், தொடர்பான சிட்டைகள், உரையின் ஆசிரியர் முதலிய மேந்தரவுகளும் (மேல் விவரங்கள் , அதாவது தரவைப்பற்றிய தரவுகள்) அடங்கும். எனினும் சொல்லோடை-2021 இல் முன்சொன்ன மேந்தரவு (metadata) அடங்காது. எதிர்காலத்தில் சரியாக ஒழுங்குபடுத்தி வெளியிடுவோம் . கட்டுரைகளை எப்படி உடைத்துப் பிரித்துச் சொற்றோடர்களாக மாற்றுகிறோம் என்பதைப்பற்றி கீழே காண்க.

3.2. **செம்மைபடுத்துதல்**

அ) தொடரறுத்தல்: பைத்தான் மொழியின் NLTK களஞ்சியத்தின் sent_tokenize நிரல் கூற்றை கொண்டு சொற்றொடர்களை உடைக்கிறோம். ஆங்கில மொழிக்காக எழுதபட்டப் நிரல்கூறு எனினும், சிலவிடங்கள் தவிர்த்து (காட்டாக சொற்சுருக்கங்கள்:- த.நா. ; ஐ.நா) தமிழ் சொற்றொடர்களை உடைக்கவும் உதவுகிறது. இத்தரவுக் கணத்தில் இருப்பது போல் மாபேரளவில் பனுவல்கள் இருக்கும் போது, sent_tokenize கொண்டு தொடரறுத்தாலும்„ போதுமான அளவிற்கு நல்ல, முழுமையான தமிழ் சொற்றொடர்கள் கிடைக்கும் என்பது எங்கள் துணிபு . ஆ) வேற்றுமொழித் தொடர் நீக்கல் *:* தமிழும் ஆங்கிலமும் அல்லாத வேற்றுமொழி சொற்கள் , எழுத்துக்கள் நிரம்பிய சொற்றொடர்களை நீக்கிவிடுகிறோம். இ*)* முழுமையான ஆங்கிலத் தொடர்களை நீக்கல் *:* ஒரு சொற்றொடரில் முழுவதுமாக ஆங்கிலச்சொற்கள் மட்டுமே நிரம்பியிருப்பின் , அத்தொடர்களை நீக்கிவிடுகிறோம். ஈ) ஆங்கிலச் சொற்களை மறைத்தல*:* தமிழ் சொற்றொடர் களஞ்சியம் என்பதால் ஆங்கிலச்சொற்கள் வரும் இடத்தை மட்டும் சுட்டும் வகையில் , ஆங்கிலச்சொற்கள் வரும் இடங்களிலெல்லாம் , *#*ஆங்கிலம*#* என்ற சிறப்பு சொல்துண்டை*(special token)* அச்சொற்களுக்குப் பதிலாக வைக்கிறோம். உ) எண்களை மறைத்தல்: ஆங்கிலச்சொற்களை அடையாளம் காட்டியது போலவே , எண்களையும் *#*எண்*#* என்ற சிறப்பு சொல்துண்டாக மாற்றுகிறோம். ஊ) வரிசைப் படுத்தி நகல் நீக்கல் : இறுதியாக அனைத்துச் சொற்றொடர்களையும் வரிசைப்படுத்தி, நகல்களை நீக்க நமக்குக் கிடைக்கும் தொகுப்பு சொல்லோடை-*2021* தரவுக்கணம்.

4. சோதனைகளும் முடிபுகளும்

சொற்றூவல்களை கொண்டு சொற்களின் சில இலக்கணப் பண்புகளைக் கண்டறியலாம் . ஈரிழை கொண்ட முன்னூட்ட நரவலையைக் கொண்டு (two layered feedforward neural network) மொழியொப்பை வடிக்கிறோம். தாவிய-கிறுவங்களை கொண்டு வடிக்கப்படுவதால் இதை தாவிய -

கிறுவ மொழியொப்பு என்றும் அழைக்கலாம். சொற்றொடர்களில் இருந்து கிறுவங்களை எடுக்க நகரும் சாளரம் என்ற உத்தியைக் கையாள்கிறோம். ஒரு நேரத்தில் சொற்றொடரில் இத்தனை சொற்களைத்தான் கருத்தில் கொள்ளவேண்டும் என்போமானல், அதை ஒரு குறிப்பிட்ட அளவிலான சாளரத்தின் ஊடாக பார்ப்பதாய் உருவகம் செய்துகொள்ளலாம். அச்சாளரத்தைச் சொற்றொடரின் மீது ஓட்டி கண்ணில் படும் சொற்களை எடுத்துக்கொண்டால், கிடைப்பது கிறுவம். சாளரத்தின் நீளத்தைப் பொறுத்து கிறுவத்தின் நீளமும் அமையும். 2-நீளச் சாளரம் இருகிறுவங்களைத் தரும், 10-நீளச் சாளரம் 10-கிறுவங்களைத் தரும். இந்த உத்தியையே கொஞ்சம் மாற்றி, இரண்டு நகரும் சாளரங்களை ஒன்றனுள் ஒன்றாக ஓட்டினால் தாவிய-கிறுவம் எடுக்கலாம். த-நீளமுள்ள சாளரத்தினும் எ-நீளமுள்ள சாளரத்தை ஓட்டினால், (த-எ)-தாவிய-எ-கிறுவம் கிடைக்கும். எடுத்துக்காட்டாக 3-நீளங்கொண்ட சாளரம் தாவலைக் கட்டுப்படுத்தும். அதனுள் 2-நீளங்கொண்ட சாளரத்தை ஓட்டினால் 1-தாவிய-2-கிறுவங்கள் கிடைக்கும்.



படம்-5: இரு நகரும் சாளரங்களைக் கொண்டு ஒன்றை ஒன்றனுள் ஓட்ட தாவிய-கிறுவங்கள் கிடைக்கும். மேற்காணும் இரண்டு சாரளங்களில் 3-நீளங்கொண்ட சாளரம் தாவலை கட்டுப்படுத்தும். அதனும் 2-நீளங்கொண்ட சாளரத்தை ஓட்டினால் 1-தாவிய-2-கிறுவங்கள் கிடைக்கும்.



படம்-6: ஈரிழை கொண்ட நரவலைக்கு சொற்றூவல்களை உள்ளீடாகக்கொடுத்து அருகமை கிறுவச் சொற்களை கணிக்க பணித்தால், பயிற்ச்சிக்கு பிறகு சொற்றூவல்கள் சொற்களின் சில இலக்கணப் பண்புகளை அகப்படுத்தி இருக்கும்.

வாடிவாசல்	ஜல்லிக்கட்டு	காளைகள்	சிரிக்கிறார்	மெரினா	காவிரி	பாயும்
கிரிக்கெட்	தோனி	டெஸ்ட்	போட்டி	அணி	பாகிஸ்தான்	பிசிசிஐ
கவிஞர்	கமல்	துரைசாமி	கருணாநிதி	ராமக்கிருஷ்ணன்	யுவன்	வழங்கியவர்
அழகான	அழகிய	அழகாக	பிரம்மாண்டமான	அழகு	டிரெண்ட்	காதல்

அட்டவணை-2: இரு சொற்களுக்கு இடையே இருக்கும் cosine-தூரத்தை வைத்து நெருங்கிய சொற்கள் என்னென்ன என்ற அலசலில் கிடைத்த எடுத்துக்காட்டுகள்.

படம்-6 நரவலையின் அமைப்பை விளக்கும் . சொற்றூவல் காவிகளின் அளவு *=200.* அதாவது உள்ளீட்டிழையின் பரிமானம் 200, மொத்தச் சொற்களின் எண்ணிக்கை (= 301515) வெளியீட்டிழையின் பரிமானமாகும். நரவலையை பயிற்றுவிக்கப் பட்ட பிறகு அதன் சொற்றூவல் காவிகளை எடுத்து அவற்றுள் இருக்கும் பண்புகளை ஆய்ந்தால் சுவையான சில விவரங்கள் புலப்படும் . Cosine-distance என்ற இரு காவிகளுக்குள் இருக்கும் தூரத்தைக் கொண்டு அட்டவணை -2 இல் உள்ள எடுத்துக்காட்டுகள் நிரப்பப் பட்டுள்ளன . வாடிவாசல் என்ற சொல்லின் காவியை மற்றனத்து சொற்களின் காவிகளோடு cosine-தூரத்தைக் கொண்டு ஒப்பிட்டு அருகில் இருக்கும் சொற்கள் என்னென்ன என்று பார்த்தால் ஜல்லிக்கட்டு , காளைகள், மெரினா முதலிய சொற்கள் நமக்குக் கிடைக்கின்றன. இது எப்படியான இலக்கணக் கூறுகளைச் சுட்டுகிறது என்று நேரடியாக புரியாவிட்டாலும், பார்க்கையில் தொடர்புடைய சொற்களை அறியத்தருகிறது.

4.1. **சொல்லோடை-2021 தரவுக்கண விவரம்**

சொற்றொடர் அடைவு : மேற்சொன்ன படி பனுவல்களை தொடர்களாக அறுத்து , பிழை களைந்து, வரிசைப்படுத்தி நகல்நீக்கி படைக்கப்பட்ட சொற்றொடர் தரவுக்கணம், சொல்லோடை-2021. மொத்தம் ஏழு கோடிக்கும் சற்றே அதிக (72000000) சொற்றொடர்களைக் கொண்டுள்ளது.

சொல்லடைவு: எல்லாச் சொற்றொடர்களையும் தொடருடைத்து (word-tokenize), குறைந்தது நூறு முறையாவது உரைகளில் வந்திருக்கும் சொற்களை மட்டும் கொண்டு சொல்லடைவு ஒன்றை படைக்கிறோம். இதில் மொத்தம் முன்னூறாயிரம் சொற்களுக்கும் கொஞ்சம் கூடுதலாக உள்ளன . சொல்லடைவு அகரவரிசையிலும், நிகழ்வெண் வரிசையிலும் வழங்குகிறோம்.

கிறுவடைவு: கிறுவங்கள் சொல்லளவில் தான் இருக்க வேண்டும் என்றில்லை , எழுத்தளவிலும் இருக்கலாம். சொல்லடைவை முதலாகக்கொண்டு எழுத்தளவிலான கிறுவங்கள் ஆக்குகிறோம் . தமிழின் உயிர் மெய் புணர்ச்சி இயல்பால் இருவகையான எழுத்துக் கிறுவங்களை படைக்கலாம் . அ) உயிர்மெய் கிறுவம்: ஒரு சொல்லை அப்படியே எடுத்து கிறுவம்பிரித்தால் 1-கிறுவம் [சொ ல் லை] எனவும், 2-கிறுவம் [சொல் ல்லை] எனவும், 3-கிறுவம் [சொல்லை] எனவும் வரும் . 4-கிறுவம்

இச்சொல்லுக்கு இல்லை என்பது தெளிவு. அ) மெய்யுயிர் கிறுவம்: சொல்லை மெய்யும்-உயிருமாக *[ச் ஒ ல் ல் ஐ]* தனித்தனியாக கிறுவம்பிரித்தால் 1-கிறுவம் *[ச் ஒ ல் ல் ஐ]* எனவும் 2-கிறுவம் *[சொ, ஒல், ல்ல், லை]* எனவும் வரும். இப்படிப் பிரிப்பதின் நோக்கம் புணர்ச்சியின் காரணமாக மறைந்திருக்கும் சொற்களை கடைந்தெடுப்பதுவே. எனினும் மெய்யுமுயிருமாக பிரிக்கும் போது முதல் எழுத்தையும் , கடையெழுத்தையும் பிரிக்காமல் அப்படியே வைத்துவிடுகிறோம் . இது ஒற்றெழுத்தில் தொடங்கும் , உயிரில் முடியும் கிறுவங்களை குறைத்துவிடுகிறது . ஒன்று முதல் பத்தாம் கிறுவம் வரை உயிர்மெய் வகையிலும், ஒன்று முதல் பதினாறாம் கிறுவம் வரை மெய்யுயிர் வகையிலும் கிறுவம்பிரிக்கிறோம் . மெய்யுயிர் கிறுவத்தில் வரும் மூங்கிறுவங்கள் உயிர்மெய் கிறுவத்தில் வரும் இருகிறுவங்களில் வரும், என்பது குறிப்பிடத் தக்கது . ஆகையினால் மெய்யுயிர் கிறுவங்களை முழுதாக (1...16) படைத்த பின்பு, அனைத்தையும் ஒன்றாக்கி மீண்டும் கிறுவத்தின் நீளம் பொறுத்து 1-கிறுவம், 2-கிறுவம் எனப் பிரித்து தனித்தனி கோப்புகளில் சேமிக்கிறோம். இப்படி கிறுவம்பிரித்ததற்கு எந்த நோக்கமுமில்லை. இது எந்த வகையில் பயன்படும் என்று சொல்வதற்கில்லை . எனினும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் கிட்டும் வகையில் வெளியிட்டால் புதிய சிந்தனைகளும் பயன்பாடுகளும் தோன்றும் என்பது எங்கள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்.

5. **முடிவுரை**

இப்பணியில், செய்யறிவுத்துறை என்பது கணினியியல், நரம்பியல், மொழியியல், உளவியல், முதலிய பலப்பல துறைகளோடு பின்னிப்பிணைந்தது. முடிந்தவரை எளிமையான முறையில் ஏன் தமிழை செய்யவறிவுத் துறை அடியெடுத்து வைக்கவேண்டும் என்பதன் அவசியத்தை உணர்த்த முயன்றுள்ளோம். செய்யறிவிற்கும் கற்குங்கருவியியலுக்கும் தரவுக்கணங்கள் எப்படி இன்றியமையாதவை என்பதை அலசுகிறோம் .. எவ்வித அடையாளக்குறிகளும், சிட்டைகளும் இல்லாத வெறும் பனுவல்களைக் கொண்ட தரவுக்கணங்களை வைத்தே சிறப்பான செயலாக்கங்களை செய்யமுடியும் என்பதையும் தாவிய-கிறுவ ஒப்பின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளோம். வருங்காலத்தில் பல்வேறு அடையாளச்சிட்டை போன்ற மேந்தரவு ஏறிய தரவுக்கணங்களை படைப்பது மிகத்தேவையான் ஒன்றாகும் . தமிழுக்கென இருக்கும் சிறப்பியல்புகளை கணினிக்குக் கற்றுத்தர மொழியற்ஞர்கள் பல்வேறு வினையாட்டங்களை வடிவமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறோம் . தொகுத்த தரவுக்கணத்தையும், ஆக்கிய தாவிய-கிறுவ ஒப்பையும் பொதுவெளிக்கு சமர்ப்பிக்கிறோம்.

References

1. McCulloch, W. S.; Pitts, W. A Logical Calculus of the Ideas Immanent in Nervous Activity. The Bulletin of Mathematical Biophysics 1943, 5 (4), 115–133. https://doi.org/10.1007/bf02478259.

2. Rosenblatt, F. (1958). The perceptron: A probabilistic model for information storage and organization in the brain. Psychological Review, 65(6), 386–408. https://doi.org/10.1037/h0042519
3. Parker, D. B. Learning-Logic : Casting the Cortex of the Human Brain in Silicon.; Massachusetts Institute Of Technology, Center For Computational Research In Economics And Management Science: Cambridge, Massachusetts, 1985.
4. Mnih, V.; Kavukcuoglu, K.; Silver, D.; Rusu, A. A.; Veness, J.; Bellemare, M. G.; Graves, A.; Riedmiller, M.; Fidjeland, A. K.; Ostrovski, G.; Petersen, S.; Beattie, C.; Sadik, A.; Antonoglou, I.; King, H.; Kumaran, D.; Wierstra, D.; Legg, S.; Hassabis, D. Human-Level Control through Deep Reinforcement Learning. Nature 2015, 518 (7540), 529–533. https://doi.org/10.1038/nature14236.
5. Miikkulainen, R.; Liang, J.; Meyerson, E.; Rawal, A.; Fink, D.; Francon, O.; Raju, B.; Shahrzad, H.; Navruzyan, A.; Duffy, N.; Hodjat, B. Evolving Deep Neural Networks. arXiv:1703.00548 [cs] 2017.
6. Stanley, K. O.; Miikkulainen, R. Evolving Neural Networks through Augmenting Topologies. Evolutionary Computation 2002, 10 (2), 99–127. https://doi.org/10.1162/106365602320169811.
7. Andreas, J.; Rohrbach, M.; Darrell, T.; Klein, D. Neural Module Networks.
8. Minsky, M.; Papert, S. A. Perceptrons an Introduction to Computational Geometry; The Mit Press, 2017.
9. Ivakhnenko, A. G. Polynomial Theory of Complex Systems. IEEE Transactions on Systems, Man, and Cybernetics 1971, SMC-1 (4), 364–378. https://doi.org/10.1109/TSMC.1971.4308320.
10. Lecun, Y. A Theoretical Framework for Back-Propagation. Proceedings of the 1988 Connectionist Models Summer School, CMU, Pittsburg, PA 1988, 21–28.
11. Rumelhart, D. E.; Hinton, G. E.; Williams, R. J. Learning Representations by Back-Propagating Errors. Nature 1986, 323 (6088), 533–536. https://doi.org/10.1038/323533a0.
12. Hochreiter, J. DIPLOMARBEIT IM FACH INFORMATIK Untersuchungen Zu Dynamischen Neuronalen Netzen; 1991.
13. Hochreiter, S.; Schmidhuber, J. Long Short-Term Memory. Neural Computation 1997, 9(8), 1735–1780.https://doi.org/10.1162/neco.1997.9.8.1735.
14. Lecun, Y.; Bottou, L.; Bengio, Y.; Haffner, P. Gradient-Based Learning Applied to Document Recognition. Proceedings of the IEEE 1998, 86 (11), 2278–2324. https://doi.org/10.1109/5.726791.
15. Silver, D.; Huang, A.; Maddison, C. J.; Guez, A.; Sifre, L.; van den Driessche, G.; Schrittwieser, J.; Antonoglou, I.; Panneershelvam, V.; Lanctot, M.; Dieleman, S.; Grewe, D.; Nham, J.; Kalchbrenner, N.; Sutskever, I.; Lillicrap, T.; Leach, M.; Kavukcuoglu, K.; Graepel, T.; Hassabis, D. Mastering the Game of Go with Deep Neural Networks and Tree Search. Nature 2016, 529 (7587), 484–489. https://doi.org/10.1038/nature16961.
16. Duch, Wlodzislaw; Norbert Jankowski. Survey of Neural Transfer Functions.(1999).

17. *Leipzig Corpora Collection:* Tamil community corpus based on material from 2017. Leipzig Corpora Collection. Dataset. https://corpora.uni-leipzig.de?corpusId=tam_community_2017.
18. Divyanshu Kakwani and Anoop Kunchukuttan and Satish Golla and Gokul N.C. and Avik Bhattacharyya and Mitesh M. Khapra and Pratyush Kumar, IndicNLPSuite: Monolingual Corpora, Evaluation Benchmarks and Pre-trained Multilingual Language Models for Indian Languages, Findings of EMNLP (2020)
19. Malarkodi Nathan and Lalitha devi, Fine-Grained Named Entity Recognizer for Tamil, Tamil Internet Conference (TIC 2019)
20. Lakshmanan, BalaSundaraRaman ; Ravindranath, Sanjeeth Kumar, Theedhum Nandrum@Dravidian-CodeMix-FIRE2020: A Sentiment Polarity Classifier for YouTube Comments with Code-switching between Tamil, Malayalam and English, FIRE 2020

கே ஃபோர் கீபோர்டு இரண்டாம் பதிப்பின் புது உத்திகள்

முனைவர் வெ. கிருஷ்ணமூர்த்தி
முன்னாள் பேராசிரியர், அண்ணா பல்கலைக் கழகம்
லேர்ன்ஃபன் சிஸ்டம்ஸ்
prof.vkrish@gmail.com

Key Words
Visually challenged, Keyboard, பார்வைக் குறைபாடு, விசைப்பலகை

கட்டுரைச் சுருக்கம்

கே ஃபோர் கீபோர்டின் முதல் பதிப்பை உருவாக்கும்போது, இந்தப் புதிய தொழில்நுட்பமானது, பார்வைக் குறைபாடு உள்ள இளம் தலைமுறையினருக்கு எல்லா வழிகளிலும் பயன் உள்ளதாக இருக்க வேண்டும் என்பது முதன்மையான நோக்கமாக இருந்தது. அதனால் அதிக அளவில் செயல்பாடுகள் கொடுக்கப்பட்டிருந்தன. இரண்டாவது பதிப்பைத் தொடங்கும்போது, எளிமையாக இருக்க வேண்டும் என்பது முதன்மை நோக்கமாக வைக்கப்பட்டது. இதனால், ஏற்கனவே இருந்த சில செயல்பாடுகள் நீக்கப்பட்டன. சில மாற்றப்பட்டன. சில சேர்க்கப்பட்டன.

ஒரு தடவல் எல்லா உள்ளீடுகளுக்கும் என்னும் கோட்பாடு செயல்படுத்தப்பட்டது. இதனை நிறைவேற்றும் விதத்தில் தடவலின் வரையறை சற்று மாற்றி எளிமையாக்கி வைக்கப்பட்டது. இப்படிச் செய்வதால் ஒரு தடவலுக்கு அனுமானிக்கப்படும் சொற்கள் சில சமயங்களில் ஒன்றுக்கும் மேற்பட்டு வரும் நிலமை உருவாகிறது. இதைக் குறைக்க, உயிர் நீட்சி என்னும் ஒரு புது உத்தி செயல்படுத்தப்பட்டுள்ளது. பல மொழிகளிலும், உயிர்மெய் எழுத்து ஒரு தனி எழுத்தாகவே பார்க்கப்படுகிறது. மெய்யுடன் உயிர் சேர்த்தே பார்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில் இந்த உத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் 90 விழுக்காட்டிற்கும் மேலாக, ஒரு தடவலுக்கு நாம் நினைக்கும் சொல்தான் முதலில் வரும். இது உள்ளீட்டு வேகத்தை அதிகரிக்கிறது.

ஒரு தடவலில், தசமப் புள்ளி உட்பட, ஒரு எண் முழுவதையுமே உள்ளிட வகை செய்யப்பட்டுள்ளது. ஒரு தடவலில் ஒரு சொல்தொடரையும் உள்ளிடலாம். ஒரு தடவலில், ஒரு குறியீட்டையும், ஒரு ஈமோஜி அல்லது பல ஈமோஜிக்களையும் கூட உள்ளிடலாம். ஒரு தடவலில் சீர்மைச் செயல்பாட்டையும் செயல்படுத்தலாம். இவை ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாமல் தனித்தனியே செயல்படும்.

தமிழில் ஒரு சொல்லில் பத்துக்கும் மேற்பட்ட நீட்சிகள்கூட இருக்க முடியும். எத்தனை நீட்சிகளுடன் எவ்வளவு பெரிய தமிழ்ச் சொல்லாக இருந்தாலும், ஒரே தடவலில் பெறும் வசதி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இங்கும் வேகத்தை அதிகரிக்க ஒரு புதிய உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. தொடக்கநிலை கணிப்புகள் இந்த விசைப்பலகையானது உள்ளீட்டு வேகத்தை சுமார் இரு மடங்காக்குகிறது என்பதைக் காட்டுகின்றன.

கட்டுரை

முதன்மையான மாற்றங்கள் என்று எடுத்துக்கொண்டால், எல்லாத் தடவல்களும் ஒரே அமைப்பில் செயல்படுவதையும், ஒரு சொல்லைத் தடவும் விதத்தில் செய்யப்பட்ட மாற்றத்தையும் கூறலாம்.

எழுத்துக்கள், சொற்கள், எண்கள், சொற்றொடர்கள், ஈமோஜிக்கள், குறியீடுகள் என்று எல்லாவற்றையும் வெவ்வேறு அமைப்புகளுக்குச் சென்று அந்த அமைப்பில் தடவும் முறை மாற்றப்பட்டு, இவை எல்லாமே ஒரு அமைப்பில் தடவுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. சாதாரணத் தடவல்கள் எண், எழுத்து அல்லது சொல்லைக் கொடுக்கும். இந்த மூன்றுக்குள் வேறுபடுத்த, எழுத்துக்கள் மற்றும் இலக்கங்களின் இடங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. முதல் விசையில், கீழ் நோக்கித் தொடங்கும் இலக்கங்கள் மற்றும் எழுத்துக்களின் கீற்றுகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன. அடிப்படைத் தடவல்களை கீற்று என்போம்.



படம் 1. சில கீற்றுகள்

கீற்று தொடங்கும் இடத்தில், அதன் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இலக்கங்களும் எழுத்துக்களும் வெவ்வேறு கீற்றுகளாக இருப்பதைக் கவனிக்கவும். ஒரு கோடு மட்டும் இருந்தால் அது கீற்றாக மட்டும் எடுத்துக்கொள்ளப்படும். எழுத்துக்கள் எல்லாம் ஒரு நீளமான கோட்டுடன் தொடங்குகின்றன. ஆனால், சொல் போன்றவற்றுக்கான தடவல்கள் எல்லாம் ஒரு குட்டையான கோட்டுடன்தான் தொடங்கும். அதனால் எழுத்துக்களுக்கும், இலக்கங்களுக்குமான தடவல்கள் மற்றதற்கான தடவல்களில் இருந்து வேறுபடுகிறது.

ஒரு கீற்றாக இல்லாத தடவலானது, ஒரு சொல், எண், ஒரு சொல்தொடர், ஈமோஜி, அல்லது குறியீடுகளின் தொடர் என்பதில் ஒன்றைக் குறிக்கலாம். தடவலின் கடைசி ஒன்று, இரண்டு அல்லது மூன்று கோடுகள், அந்தத் தடவலின் வகையைக் குறிக்கிறது. இந்த இறுதிக் குறிப்பு எதுவும் இல்லை என்றால் அது சொல்லைக் குறிக்கும். கடைசிக் கோடு ஒரு மூலை விட்டமாக இருந்தால் அது ஒரு எண் சரத்தைக் குறிக்கும். அடுத்த மாற்றம், ஒரு தடவலில் ஒரு எழுத்தை எப்படிக் குறிப்பிடுவது என்பது. முன்பு தொடக்க மற்றும் கடைசி எழுத்துக்கு ஒரு மாதிரியாகவும், இடைப்பட்ட எழுத்துக்களுக்கு வேறு மாதிரியாகவும் இருந்தது. இப்போது எல்லா எழுத்துக்களுக்கும் ஒரே மாதிரியாக மாற்றப்பட்டுள்ளது. ஒரு விசையில் ஒரு எழுத்து இருக்கும் திசையில், ஒரு குட்டையான கோடானது, அந்தத் திசையில் இருக்கும் எல்லா எழுத்துக்களையும் குறிக்கும். இந்த

மாற்றம் தடவும்போது சிந்திப்பதை எளிதாக்குகிறது. ஆனால், ஒரு தடவலுக்கு சில சமயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் அனுமானிக்கப்படுவதற்கு வழி செய்துவிடுகிறது. எண் தொடர்களுக்கான தடவல் சரியான ஒரே ஒரு எண் சரத்தைத்தான் வெளியிடும். இங்கு பல அனுமானங்களுக்கு இடமில்லை. இது மற்ற தடவல்களில் இருந்து மாறுபட்டு இருப்பதைக் கவனிக்கவும்.



படம் 1. உயிர் நீட்சிகள்

அடுத்த மாற்றம், அனுமானங்களைக் குறைப்பதற்குப் பெரிதும் பயன்படுகிறது. இந்திய மொழிகள் போன்றவற்றில், உயிர்மெய் எழுத்துக்களை ஒரே எழுத்தாகத்தான் பார்க்கிறோம். மெய்யுடன் உயிர் சேர்வதற்கு, முதலில் மெய் அடுத்து உயிர்க்குறியீடு என்று உள்ளிடுகிறோம். இந்த உயிர்க்குறியீட்டினைத் தனியாக உள்ளிடாமல், மெய்யெழுத்து முடியும் இடத்தில், தொடர்ந்து கொடுப்பது இந்தப் புது முறை. எடுத்துக்காட்டாக, 1, கீழ், வலம், என்னும் தடவல் க் மற்றும் ஞ் என்ற எழுத்துக்களைக் குறிக்கும். மெய்யெழுத்தின் திசைக்கு செங்குத்தாக, விசைப்பலகையின் உட்புறம் நோக்கிய ஒரு குட்டையான கோடு, மெய்ப்புள்ளியைக் கொடுக்கிறது. இந்த செங்குத்துக்கோட்டை உயிர் நீட்சி என்போம். இதேபோல், எல்லா உயிர்க்குறியீடுகளுக்கும் ஒவ்வொரு உயிர் நீட்சி உள்ளது. அவை, குட்டை - மெய்ப்புள்ளி. அடுத்தடுத்த இரு நெட்டைகள் - ஆ. நெட்டை - இ. அடுத்தடுத்த இரு குட்டைகள் - உ. குட்டையும் அடுத்து நெட்டையும் - எ, ஐ, ஒள. ஒரு குறிலுக்கான

நீட்சியுடன் கடைசியில் ஒரு குட்டையைச் சேர்ப்பது, அந்தக் குறிலுக்கான நெடிலைக் கொடுக்கும். எடுத்துக்காட்டாக, மூன்று குட்டைகள் ஊகாரத்தைக் கொடுக்கும்.



படம் 2. ‘கை’, ‘4.1+6’, ‘ப ம - புன்சிரிப்பு முகம்’ ஈமோஜி

இந்த நீட்சிகள் தமிழ் எழுத்துக்கள் இருக்கும் விழுக்காட்டை அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ளது. ஒரு உயிர் நீட்சி இருந்தால் அதற்கு முன்னால் இருப்பது ஒரு மெய் என்பது தெரியும். அதனால் முன்னால் இருக்கும் குறியீட்டுக்கான அனுமானங்கள் பெரிதும் குறைகின்றன. இது அனுமான நேரத்தைக் குறைக்கிறது. உயிர் நீட்சியானது உயிர்களின் இடத்தைச் சரியாகக் குறிப்பிடுவதால், அனுமானங்களின் எண்ணிக்கை பெரிதும் குறைந்து, நாம் நினைக்கும் சொல் முதலில் வருகிறது. எண்களை உள்ளிடும்போது, இலக்கங்களுடன் புள்ளியும் காற்புள்ளியும் தேவைப்படுகிறது. ஒரு கணிப்பைச் செய்ய கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் குறிகளுடன், பிறைக்குறியீடுகளும் தேவைப்படுகின்றன. இந்த எல்லாக் குறியீடுகளும் இலக்கங்களுக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்த்து ஒரே தடவலில்

பெறலாம். எடுத்துக்காட்டாக, 23.45+(67-14). இதை உள்ளிட்டவுடன் ஒரே தடவலில் இதைக் கணக்கிட்டு விடை காணவும் முடியும். கணிப்பானுக்காக விசைப்பலகையை விட்டு வெளியே செல்ல வேண்டியதில்லை. எண்களையும் எழுத்துக்களையும் சேர்த்து உள்ளிடுவது உள்ளீட்டை எளிதாக்குகிறது.



படம் நீளமான சொற்கள். மற்றும் சொற்றொடர்

தென்னிந்திய மொழிகளில் ஒரு சொல்லில் பத்துக்கும் மேற்பட்ட நீட்சிகள்கூட இருக்க முடியும். எத்தனை நீட்சிகளுடன் எவ்வளவு பெரிய தமிழ்ச் சொல்லாக இருந்தாலும், ஒரே தடவலில் பெறும் வசதி புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இங்கும் நீளமான சொற்களை உள்ளிடுவதில் நேரத்தைச் சற்றே குறைக்க இன்னொரு உத்தி செயல்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் மெய்யெழுத்துக்களும், இகர, உகர உயிர்மெய்களும், அதிகம் பயன்படும். பெரிய சொல்லின் நடுவில் வரும் இந்த எழுத்துக்களை, ஒரு நீண்ட செங்குத்துக் கோடு, நீண்ட படுக்கைக் கோடு, மற்றும் நீண்ட மூலைவிட்டக் கோடு இவற்றால் பெறலாம். இவற்றை எந்த விசையில் இருந்தும் செய்யலாம். இங்கு உயிர்க்குறியீடு நிலைப்படுத்தப்படுகிறது.

மெய்யானது எதுவாகவும் இருக்கலாம். என்றாலும், பெரிய சொல்லில் இதன் தாக்கம் அதிகம் இல்லாமல் நாம் நினைக்கும் சொல் முதலில் வந்து விடும்.

ஈமோஜிக்களை அவற்றின் பெயர்களை வைத்து ஒரே தடவலில் உள்ளிடும் முறை, ஆயிரக்கணக்கான ஈமோஜிக்களையும் எளிதாக உள்ளிடுவதை சாத்தியமாக்குகிறது. இதே போல், எல்லாக் கணிதக் குறியீடுகளையும் எளிதாக உள்ளிடுவது மாணவர்களின் எதிர்காலத்திற்குப் பெரிதும் பயன்படும். தொடக்கநிலை கணிப்பு இந்த விசைப்பலகையானது உள்ளீட்டு வேகத்தை சுமார் இரு மடங்காக்குகிறது என்பதைக் காட்டுகின்றது.

முடிவுரை

இந்த விசைப்பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள கோடுகளின் நீளமும் திசையும் விரும்பத்தக்கவை என்ற அளவில் மட்டுமே இருக்கின்றன. எவராலும் இவற்றை அப்படியே செயல்படுத்த முடியாது என்பதே உண்மை. அதனால், இந்த வரையறைகளில் இருந்து மாறுபட்டிருந்தாலும், விசைப்பலகை வேலை செய்யும்படி செயல்படுத்தப்பட்டுள்ளது. இங்கு கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுப் படங்களைப் பார்த்தால் இது தெரியும்.

இந்த விசைப்பலகையில் உள்ளிடுவது, சாதாரண விசைப்பலகையில் உள்ளிடும் நேரத்தில் சுமார் பாதி அளவே எடுத்துக்கொள்கிறது. நேரம் மிச்சமாதல், எளிதான இயக்கம், எண்கள் மற்றும் குறியீடுகளைக் கையாளும் முறை என்று பல விதங்களிலும் சாதாரண விசைப்பலகைகளை விட கே ஃபோர் கீபோர்டு சிறப்பாகச் செயல்படும்படி இந்த இரண்டாம் பதிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

Tamil News Classification using LSTM

M. Pavithrah
Dept. of Information Technology
Chennai Institute of Technology
Email: pavithrahmit2019@citchennai.net

S. Nandhini
Dept. of Information Technology
Chennai Institute of Technology
Email:nandhinisit2019@citchennai.net

R. Janarthanan
Center for Artificial Intelligence & Research
Chennai Institute of Technology
E-mail: janarthananr@citchennai.net

R. Ponnusamy
Center for Artificial Intelligence & Research
Chennai Institute of Technology
E-mail: ponnusamyr@citchennai.net

Abstract

Tamil Newspaper Classification is the one important and unique task performed over the information systems. Attaining a high accuracy for Tamil Text Classification is a challenging task. It is proved that deep learning proved to be effective in doing different complex text information processing and classification. Most of the existing classification systems of Tamil Information Processing Systems use the only conventional model. Therefore, in this work, an attempt is made to classify the text using deep learning algorithms. In this work, an attempt is made to classify the Tamil News Paper text using Long Short Term Memory (LSTM) System. The nouns, verbs are extracted and the term-frequency, inverse document frequency are taken from the training and testing documents by eliminating the stop words. This input is given to the LSTM machine to extract important features which enable the system to classify the text. It is performing a multiclass classification with few classes. At first, the system uses the different Tamilmurasu Newspaper Dataset topics collected from the Kaggle repository for both training and testing. Standard measurements like accuracy, precision, recall, and F1-measures are calculated and presented.

Keywords: Newspaper Classification, Long Short Term Memory (LSTM) Tami Text, Accuracy, Precision, Recall, F1-measure.

1. Introduction

Text classification is one of the significant tasks in text mining and information retrieval. It is also a challenging task while doing it for the Tamil Language. Tamil text is a non-roman letter script and therefore information processing needs additional steps to do any normal English-like Language Processing. It means that it is a multi-glyph-based information processing system compared to English-like languages. Text

Classification is the task of finding and assigning the given text into different classes. In a real-time environment text analysis, organizing, sorting text data set into different classes is a time-consuming task.

In the existing classification system, most of the researchers use only conventional methods, like Naive Bayes, Decision Tree, K-Nearest Neighbor, Support Vector Machine, etc. Accuracy and the semantic validity of the classified documents is the basic measure to decide the quality of the classification system. In this case of conventional methods, it is questionable. The long short-term memory (LSTM) model for text classification produces accurate results and has been recently used in various Information Retrieval process. Therefore, in recent times it is proved that Deep Learning algorithms played a vital role in information mining. In this work, we attempt to classify the Tamil Text using the LSTM Machine.

The Long Short-Term Memory (LSTM) system is a recurrent neural network that can learn the order dependence of classification problems. The Tamil text classification process is divided into three stages:

1. Preprocessing stage: This stage includes stop word removal, stemming, punctuation and special symbol removal.

2. Feature extraction: It consists of statistical methods and language methods, and extracts relevant features from documents for classification.

3. Processing stage: The final stage of Tamil text classification. The text classification system is applied to the extracted features to classify documents.

This paper attempted to classify the Tamil text documents into 15 different predefined categories using Tamilmurasu dataset collected from the Internet. The performance of the system is measured through the standard normal text classification metrics. In this paper, Section 2 reviews the literature, Section 3 describes basic News Categories of linguistic knowledge. Section 4 System Architecture Design in detail. Section 5 provides an overview experimental setup in section, 6 which explains the result and discussion. Section 7 Conclusion about the interpretation of the paper.

2. Background Literature

The Tamil text classification has an important tool for different mining and information retrievals systems. A vast amount of work has been carried out to classify the text worldwide by considering its importance using different algorithms and modern tools. Several data sets are available on the web, leading to the development of Tamil text Data Mining. This section deliberates works related to text classification systems development.

1. Ramraj, S., et al., in 2020 [1] attempted to classify the Tamil news article using CNN models. It is inferred that Convolutional Neural Networks with pre-trained embedding's for the Tamil language gives better results compared to Support Vector Machine and Naive Bayes trained with term frequency and inverse document frequency feature vectors. The precision, recall, and F1 score for the class politics is low when compared to the other two methods.

2. Wang, D., Bai, Y., & Hamblin, D. in 2019 [2], developed an algorithm to spontaneously retrieve critical information from raw data files in National Aeronautics and Space Administration's airborne measurement data archive.

3. Ade Clinton Sitepu, Wanayumini Wanayumini, Zakarias Situmorang in 2021[3] attempted to classify the social media text into bullying and non-bullying using Naïve Bayes Method and reported that 88% of results.

4. Huaiguang Wu, Daiyi Li, and Ming Cheng, in 2019[4] classified the larger Chinese text using SVM and CNN methods. Text classification is performed using SVM multiple classifiers. Experimental results show that the CSVM algorithm is more effective than other traditional Chinese text classification algorithms.

5. D. M. Harikrishna, K. Sreenivasa Rao in 2019 [5] classified stories of Indian languages using Conventional methods, like KNN and SVM. It is observed that the performance of the classifier is evaluated using 10-fold cross-validation, and the effectiveness of the classifier is measured using accuracy, recall, and F metric. It can be seen from the classification results that adding language information can improve the performance of story classification.

6. Winda Kurnia Sari, Dian Palupi Rini, Reza Firsandaya Malik in 2020[6] by changing the boundaries and contrasting the eight proposed LSTM models with enormous scope informational indexes, the confirmations are characterized to show that the LSTM with GloVe elements can accomplish great execution in text grouping. For this situation, the creator additionally detailed 95% or more outcomes.

7. Winda Kurnia Sari; Dian Palupi Rini; Reza Firsandaya Malik, in 2021 [7] attempt to classify the documents classify the web of science documents into seven different subject categories. In this classification, the authors reported 82.13% of results in their experiments.

8. Dennis Dang, Fabio Di Troia, Mark Stamp [8] have attempted to classify the malware using LSTM employ techniques used in natural language processing (NLP), including word embedding and bi-direction LSTMs (BiLSTM), and this work also use convolutional neural networks (CNN). It gives the best classification.

To exploit the LSTM method in this work an attempt is made to classify the Tamil documents using Tamilmurasu dataset [10], which is openly available in the Kaggle repository.

3. Classification Categories

Tamil Murasu [9] is a daily evening Tamil newspaper. It is being published in various parts of Tamilnadu from 1935 onwards. It classifies the news article into 15 Categories and the categories are shown in the following hierarchical tree. In this process of classification, the given document is classified into one of the following categories.



Figure 1 Tamilmurasu Classification Tree

4. System Design

In the arranged model first, the Input of each report is assessed to distinguish the classes. The info variable anticipated through the LSTM model is the basic factor of the Tamilmurasu data set collection. Further LSTM strategy is applied to discover comparative classifications, which has a high likelihood of discovering classes. To show the utility of the proposed approach brief marks of numerical model and methodology are given by X_1, X_2, X_3……X_i is the Document categories predicted in C_1, C_2, C_3….C_i. The proposed system architecture model of the developed system is given in figure 2.



Figure 2. The architecture of Tamil Text Classification System using LSTM Model

Text Corpus Acquisition

A lot of dataset is generally expected to get great order exactness of any AI framework. For that reason a text corpus of Tamilmurasu data set gathered from various Kaggle Repository, is utilized. The corpus was physically characterized into fifteen unique areas specifically news, Tamilnadu, Indian, Crime, Cinema, District, sports, world, state express, heading news, employment, medical, spiritual, education, business, and mystery.

Tokenization

Tokens are taken from the corpus by removing white spaces and punctuation marks. Sometimes the tokens are multiple words. To get the token initially the lexicon is searched, if it is there then it will be taken for counting. The 'tokenization lexicon' is manually prepared and gathered from different sources containing 356,791 unique entries.

Normalization

Given token is converted as the Tamil Unicode text and this will make the system universalize the document. Sometime it contains Arabic alphabets or non-standard word class and are defined through the regular expression. These words and alphabets are standardized and converted into equivalent Tamil Words and strings.

Stop word Elimination

Those words are called as functional words which has no impact on text classification and therefore it should be eliminated. These words are sometimes frequently occurring words and a bag of words list is maintained. It will be eliminated from the list of tokens before proceeding to the next step. In this 219 such words are eliminated from the document text list.

LSTM Model

Long Short-Term Memory (LSTM) networks are an altered adaptation of repetitive neural networks that streamline reviewing data from an earlier time. Here, the RNN's evaporating inclination issue is solved. LSTM is appropriate to distinguish, investigate, and foresee time models given delays of the dubious term. Back-spread is utilized to prepare the model. Three entryways are available in an LSTM organization and it is displayed in Figure 3.



Figure 3 LSTM Gates

1. **Input gate** — Find the value in the entry you want to use to change the memory. The sigmoid function determines the value that passes 0.1. The tanh function weights the sent value to choose its importance between -1 and 1.

$$i_t = \sigma\left(W_i \cdot [h_{t-1}, x_t] \; + \; b_i\right)$$
$$\tilde{C}_t = \tanh(W_C \cdot [h_{t-1}, x_t] \; + \; b_C)$$

Input gate

2. **Forget gate** — Find what you are removing from the block. The sigmoid function determines this. It outputs a value of 0 (ignore this) to 1 (leave as is) for each number in the cell state Ct-first to examine the previous state (ht-1) and the content entry (Xt).

$$f_t = \sigma\left(W_f \cdot [h_{t-1}, x_t] \; + \; b_f\right)$$

Forget gate

3. **Output gate** — Input and block memory are used to define the output. The sigmoid function determines values greater than 0.1. The tanh function weights the transmitted values to assess their importance in the range -1 to 1 and multiplies the output of the sigmoid.

$$o_t = \sigma\left(W_o \; [\, h_{t-1}, x_t] \; + \; b_o\right)$$
$$h_t = o_t * \tanh\left(C_t\right)$$

Output gate

A recurrent neural network is a type of long short term memory. In the current action, the RNN output from the previous step is used as Input. Hochreiter & Schmidhuber created the LSTM. It addressed the issue of RNN long-term dependency, in which the RNN cannot predict words stored in long-term memory but can make more accurate predictions based on current data. RNN does not deliver efficient performance as the gap length rises. By default, the LSTM can keep the information for a long time. It's utilized for time-series data processing, prediction, and classification. The LSTM features a chain structure with four neural networks and various memory blocks known as cells.



Figure 4 LSTM Chain Organization Model

Finally, when we have numerous yields, softmax function changes over yields layers into a likelihood dissemination. We have 15 marks altogether, but since we didn't one-hot encode names, we need to utilize sparse_categorical_crossentropy as classificaiton work, it assumes 0 is a potential name too, while the tokenizer object which tokenizes beginning with whole number 1, rather than number 0. Accordingly, the last Dense layer needs yields for categories 0, 1, 2, 3, 4, 5… 15 and the number 0 has never been utilized.

5. Experimental

The dataset used for classification is received from the Kaggle free open source repository. It is a Tamilmurasu News Dataset having 127725 News Articles of fifteen different categories. This dataset includes four different attributes, such as News Id, News Category, News Title, and News. In this dataset, the given dataset is divided into two groups. One group for training and another one group for test data. In case of training all attributes data items are taken and in case of testing the News Title and News Article alone take for experimentation.

5.1 Experiment Setup

